**R 1127**

திடம் கொண்டு முன்னேறு !

**COURAGE, PRESS ON !**

களைப்பாயிருக்கிறதே, சோர்ந்துபோனேனே! நல்லது!

அதனால் என்ன ? சொகுசான வாழ்க்கை,

எளிமையாக, இலகுவாக வாழவேண்டுமோ ?

காற்றில் படபடக்கும் ரோஜா இதழ்களை

காலைச்சுற்றிலும் பரப்பி அதன்மீது நடக்கவேண்டுமோ ?

வா எழும்பு! உன்னை அழைக்கும்போதே வேலைசெய்திடு!

திடம் கொள்! எழும்பி உன் பிரயாணத்தைத் தொடர்ந்திடு

தனிமையாய் இருக்கிறேனே!

நல்லது! அதனால் என்ன ?

சிலர் தனியாகத்தான் இருந்திடவேண்டும்

இது எல்லோருக்கும் கொடுக்கப்படுவதில்லை,

பொறுப்பாக உணர்ந்த இருதயம் எழும்பும், விழும்,

இன்னொரு வாழ்க்கையை அது

தன்னுடன் இணைத்துக்கொள்ளுமே!

இருளாயிருக்கிறதே!

நல்லது! அதனால் என்ன ?

சூரியன் ஒரு நாளும் மறையக்கூடாது என்று விரும்புகிறாயா ?

உன்னுடைய வழித்தடத்தை மறந்துவிடுவாய் என்று எண்ணுகிறாயா ?

இன்னும் தைரியம்கொள்! கண்டு விசுவாசிக்காதே, காணாமல் விசுவாசி,

வாழ்க்கையை நடத்து! உன்னுடைய ஒவ்வொரு அடியும்

கவனமாய் சரியாக வழிநடத்தப்படுகிறது என்பதை உணர்ந்திடுவாய்!

மிகவும் கடினமாக இருக்கிறது!

ஆமாம்! அதினால் என்ன

கற்பனையான வாழ்க்கை ஒரு கோடைவிடுமுறைநாளில் கற்பதற்கு ஏதுமின்றி

ஏதும் செய்யாமல் விளையாட மட்டும் முடிந்ததோ ?

போ! போய் உன் வேலையை தொடர்ந்து செய்திடு!

செய்! அல்லது செத்து மடி!

நீ இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும்!

பொறுமையாகவே கற்றுக்கொள்!

——————————————